[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the member]

## II. FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1963-64—PRESENTATION.

9-00 p.m. *** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளை நான் சமர்ப்பிக்கிறேன். மானியங்களுக்கான கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று சபை முன்பு வைக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளின் மொத்தத் தொகை 23 கோடியே 12 லட்சம் ரூபாய் ஆகும். இவற்றில் 5 கோடியே 10 லட்சம் ரூபாய் ரெவின்யூ கணக்கில் வரும். மீதியுள்ளதில் 6 கோடியே 22 லட்சம் ரூபாய் மூலதனக் கணக்கிலும், 11 கோடியே 80 லட்சம் ரூபாய் பொதுக் கடனைத் திருப்பித் தரும் கணக்கிலும் அடங்கும். துணை மதிப்பீடுகளின் பெரும்பகுதி, பற்பல தலைப்புக்களின்கீழ் சட்ட சபை ஏற்கெனவே அனுமதி தந்துள்ள நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் கூடுதலாக ஆகக்கூடிய செலவினைச் சரி செய்யும் வகையில் அமைந்துள்ளது. செலவினங்களில் ஏற்பட்டுள்ள இந்த உயர்வுகள், 1964-65-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்துடன் சபை முன்பு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வாண்டின் திருத்த மதிப்பீடுகளில் பெரும்பாலும் பிரதிபலித்திருப்பதைக் காணலாம். இவ்வாண்டு அரசாங்கம் அனுமதியளித்த "புதுப்பணித்" திட்டங்களுள், இதற்கு முன்பே சமர்ப்பிக்கப்பட்ட துணை மதிப்பீடுகளின் மூலம் சபையின் ஒப்புதல் பெறாதனவும் இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்போது கோரப்படும் நிதி ஒதுக்கத்தில் பெரும்பகுதி, பொதுக்கடன்களைத் திருப்பித் தருவதற்காகத் தேவைப்படுகிறது என்பது புலப்படும். இவ்வாண்டு ரிஸர்வ் பாங்கிடமிருந்தும், மத்திய அரசாங்கத்திடமிருந்தும் அவ்வப்போது பெற்று வந்த வழிவகை முன்பணத் தொகைகளைத் திருப்பித் தருவதற்காகவே இந்த ஒதுக்கீடு தேவைப்படுகிறது. எனவே, இதை ஒரு புதிய செலவினமாகக் கொள்ள முடியாது. 11 கோடியே 80 லட்சம் ரூபாய் இத் தலைப்பின்கீழ்த் துணைமதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மூலதனக் கணக்கில் தற்போது கோரப்படும் கூடுதல் நிதி ஒதுக்கம் 6 கோடியே 22 லட்ச ரூபாய் அளவாகும். இதில் அரசாங்க வர்த்தகத் திட்டங்களின்கீழ் செயற்கை உர வகைகளின் கொள்முதலுக்குக் கூடுதலாகத் தேவைப்படுவது மட்டும் 4 கோடியே 36 லட்ச ரூபாயாகும். நடப்பு ஆண்டில் மத்திய அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்ததை விட அதிக அளவில் நாம் உர வகைகளைப் பெற்றுள்ளோம். எனவே, இந்த உர வகைகளுக்குரிய விலையைச் செலுத்தும் வகையில், கூடுதல் நிதி ஒதுக்கம் கோரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனினும், விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்வதன்மூலம் நமது அரசாங்க வரவுகளில் இதற்கேற்ப உயர்வு ஏற்படும் என்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டும்.

25th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

பற்பல பெரிய, நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில், இவ்வாண்டில் விரைவு ஏற்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். சிறிய பாசனத் திட்டங்களுக்காக பட்ஜெட்டில் மூன்று கோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய் அளவிற்கே நிதி ஒதுக்கியிருப்பினும், தற்போது நான்கு கோடியே நாற்பத்து மூன்று லட்சம் ரூபாய் அளவில் செலவிடக்கூடும் என்று நம்புகிறோம். இவ்வாறே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்கான செலவும் ஐந்து கோடியே எழுபத்தி மூன்று லட்ச ரூபாய் அளவிற்கு உயரும். இவ்வாறு பாசனத் திட்டங்களுக்கு அதிகப்படியாக செலவாவதற்கு ஒப்ப, மத்திய அரசாங்கம் இவ்வாண்டு அதிகப்படியான நிதி உதவி அளித்துள்ளனர் என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ரெவின்யூ கணக்கில் கோரப்படும் நிதி ஒதுக்கம் பல்வேறு இனங்களிலும் பரவலாகப் பிரிந்துள்ளது. எனினும், அவற்றுள், மருத்துவம் (86 லட்சம் ரூபாய்), தொழிலாளரும் தொழிலாளர் நலனும் (54 லட்சம் ரூபாய்), பின்தங்கிய வகுப்பினர் நலன் (31 லட்சம் ரூபாய்), பாசனம் (94 லட்சம் ரூபாய்), பொதுப் பணிகள், கருவிகள் தளவாடங்கள் (76 லட்சம் ரூபாய்), பென்ஷன் (30 லட்சம் ரூபாய்) ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள உயர்வுகளைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லவேண்டும். மருத்துவத் துறையின்கீழ் ஏற்பட்டுள்ள உயர்வின் பெரும்பகுதி உணவுச் செலவு, மருந்துகள் வாங்குதல் ஆகியவற்றின் கீழாகும். பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கான செலவின் உயர்வு உபகாரச் சம்பளங்கள் தருவதற்காகக் கூடுதலாகப் பணம் ஒதுக்கியதால் ஏற்பட்டதாகும். கணக்கு முறைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, "தொழிலாளர், தொழிலாளர் நலன்" பகுதியில், "35. தொழில்கள்" என்ற கணக்குத் தலைப்பில் தற்போது உள்ள நிதி ஒதுக்கத்திற்குப் பதிலாக, "தொழிலாளரும் வேலை வாய்ப்பும்" என்ற கணக்குத் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் இப்போது கோரப்படுகிறது. பாசன ஆதாரங்களைப் பழுதுபார்த்து பராமரிக்க தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதாக இராது என்று தெரிவதால், 94 லட்சம் ரூபாய் கூடுதல் மானியம் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறே, "பொதுப் பணிகள்" தலைப்பின் கீழ் ஏற்பட்ட உயர்வில் பெரும்பகுதி, சாலைகளைப் பராமரிப்பதிலும், குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து கடந்த சில ஆண்டுகளில் எடுத்துக்கொண்ட சாலைகளைப் பராமரிப்பதற்கு ஆகும் அதிகப்படி செலவினாலும், பொதுப் பணித் துறையினர் பொறுப்பில் உள்ள கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு ஆகும் கூடுதல் செலவினாலும் ஏற்பட்டதே. மற்ற தலைப்புகளின்கீழ் ஏற்பட்ட உயர்வுகள் பெரிய அளவில் இல்லை ; அவற்றுக்குத் தனியாக விளக்கமும் தேவையில்லை எனக் கூறி, இந்த இறுதித் துணை மதிப்பீடுகளைச் சபை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.